1973 ஆகஸ்ட் 4]

தென் நெல்லை மாவட்டக் கல்வி அலுவலகக் கணக்குகள்

* 7 வினு—**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்** : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி முதன்மைக் கல்வி அதிகாரியால் தென் நெல்லை மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகக் கணக்குகள் 28-7-1972 முதல் 29-7-1972 வரை ஆய்வு செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், அந்த ஆய்வு அறிக்கையின் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 31-7-1972 அன்று தென் நெல்லை மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகக் கணக்குகள் திருநெல்வேலி முதன்மைக் கல்வி அலுவலரால் ஆண்டு ஆய்வு செய்யப்பட்டன.

(இ) இந்த ஆய்வு வழக்கமாக நடைபெறும் ஆண்டு ஆய்வே ஆகும். ஆய்வு அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள குறைகளை சரிசெய்யுமாறு மாவட்டக் கல்வி அலுவலர் கோரப் பட்டுள்ளார்.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, கல்வி அதிகாரிகள் அலுவலகத்தில் ஒவ்வொரு பிரிவிலும் எத்தனை கடிதங்கள் முடிவு எடுக்கப்படாமல் அனுவசியமாக காலம் கடத்தப் பட்டன என்ற கணக்கு எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவற்றினுடைய விவரக் குறிப்புகள் முழுவதும் தற்பொழுது என்னிடம் இல்லை. ஆனல், அப்படி ஆய்வு செய்யப்பட்டதில் சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அந்தக் குறை பாடுகளுக்குதான காரணங்களைத் கேட்டு, குறைபாடுகளை நீக்குவதற்கு வழி வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. மாவட்ட கல்வி அதிகாரிகள் இதற் கான நடவடிக்கைகள் எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக் கின்றனர். அதிலே சில இடங்களில் எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சை கேட்காமலேயே வேலைக்கு வைக்கப்பட்டது அல்லது வயது குறித்து எக்செம்ப்ஷன் வாங்காமல் வேலைக்கு வைப்பது இப்படிப்பட்ட பல குறைபாடுகள் சுட்டிக்காட்டப் பட்டிருக்கின்றன. அதற்கெல்லாம் சமாதானம் கேட்கப் பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரியான குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லித் தான் பொது மக்கள் ஆடிட் செய்ய வேண்டும் என்று கோரிக்கை வந்துள்ளதா ? அப்படி வந்த காரணத்தினால் இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று பொதுவாக மக்களுக்கு அறிவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மேல் கல்வி அதிகாரிகள் சென்று அந்த அலுவலகக் கணக்குகளைத் தணிக்கை செய்திருக்கிறார்கள். அதிலே சில குறைபாடுகள் சொல்லப் பட்டிருக்கின்றன. அந்தக் குறைபாடுகளை இயக்குநருக்கு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். இயக்குநர் அவர்கள் உரியவர்களிடம் சமாதானமும் விளக்கமும் கேட்டிருக்கிறார்கள். அதற்கு சமா தானம் சரியாக இல்லாவிட்டால் மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும். நான் முதலிலே சொன்னமாதிரி ஆடிட் வகையில் கணக்குப் பார்க்கிறபொழுது சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப் பட்டன. அவர்கள் நடந்துகொண்ட விதத்தில் ஏதாவது முறை கேடாக செயல்பட்டிருப்பார்களானால், ஒழுங்குப்படுத்துகிற முறையில் அதைப்பற்றி தனியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

ஓமியோபதி மருந்தகங்கள்

*8 வினா—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமியோபதி மருந்தகங்கள் நமது மாநிலத்தில் தற்போது எங்கெங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளன ?

(இ) வியாதியஸ்தர்கள் தங்கி மருத்துவம் பெற படுக்கைகள் உள்ள ஆஸ்பத்திரிகளை நிறுவ அரசு மேற்கொண்ட நடவடிக்கை கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இம்மாநிலத்தில் ஓமியோபதி மருந்தகங்கள் அரசினரால் இன்னும் ஏற்படுத்தப்பட வில்லை.

(இ) ஓமியோபதி மருத்துவக் கல்லூரியையும் மருத்துவ மனையையும் அரசே தொடங்குவதா அல்லது தமிழ்நாடு ஓமியோ பதி குழுவின் நிபந்தனைகளுக்குட்பட்டு அதனால் அங்கீகரிக்கப்பட